சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 5606 /அ5 /2022 நாள். 08 .08 .2022

பொருள் : போட்டித் தேர்வுகள் தொகுதி VIII பணியில் அடங்கிய செயல் அலுவலர் நிலை – IV பதவிகளுக்கான எழுத்துத் தேர்வு – தேர்வு நடத்த தேர்வுக் கூடங்கள் தெரிவு செய்தல் – அனுப்புதல் சார்ந்து

பார்வை : சென்னை-03, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரின் கடித ந.க.எண். 1412/ID-C1/2022 நாள். 01.08.2022

…………………

பார்வையில் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரின் கடிதத்தின்படி, தொகுதி VIII பணியில் அடங்கிய செயல் அலுவலர் நிலை – IV பதவிகளுக்கான எழுத்துத் தேர்வு 11.09.2022 மு.பி மற்றும் பி.ப அன்று நடைபெறவுள்ளது. நடைபெறும் தேர்வுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள தேர்வுக் கூடங்கள் தெரிவு செய்து அனுப்பப்படுகிறது. இத்தேர்வு நடைபெறும் நாளில் வேறு எந்த தேர்வும் நடைபெறக் கூடாது.

இத்தேர்விற்கு கூடுதலாக தேர்வு அறைகள் தேவைப்பட்டாலோ முதன்மைக் கண்காணிப்பாளர் பெயர் மற்றும் தொலைபேசி எண்கள் மாற்றம் இருந்தாலோ முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு தலைமையாசிரியர்கள் /முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு. தேர்வுக் கூடங்கள் ஒம்/-

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1. சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் சென்னை மாவட்டம்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம் (தகவலுக்காகவும் தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது)